வைத்திய சந்திரிகா
Nov 1942

TL
L:5m2ll N25vc
N42.4.11
210213

6 NOV 1942
304

உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 4 November 1942 No. 11

விஷய சூசிகை.	பக்கம்
வைத்தியச்செய்திகள்	1
பிரம்மீ (மதக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)	1
ஹிருதயம் (ஈரோடு Dr. V. அச்சுதன் நாயர் அவர்கள்)	1-14
ஹிருதயம் (பத்திராதிபர்)	14—20
விஷமஜ்வரம் (மதக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)	20-22

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள்நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher
No 2, Police Station West Lane, Madura.

[விலை 0—3—0

...பிரஸ், மதுரை—42.

JL
L:5ண21৮N25VL
N42.4'11.
210213

வைத்தியச் செய்திகள்.

திருச்சி ஆயுர்வேத ஸபா—on 24—10—1942 the 9th annual gathering of the Trichy Ayurveda Sabha was held at 3-30 P.M in the Trichy Ayurveda Union buildings, Chinnakadai St, Trichy. Dr. K. Narayanaswamy Iyer retired D. M. O. presided

Members from all over the district were present. After Dhanvantri Puja and Tea, Dr T. V. Radhakrishna Sastri M.A., L I. M., read a paper on "AMAVATAM" (Rheumatism). Dr. K. P. Appunni Vaidyar read a paper on "SODHANA CHIKITSA" There was a discussion on both the subjects in which all the members participated The following office bearers are elected for the coming year. Dr. P G Ganapathi Sastri, President; Dr. V. R. Subramania Iyer. Secretary, and the following three as Committee Members, 1. Dr. P S. Rama Sarma 2. Dr. T. V. Jayarama Sastri 3. Dr.K S. Soolapani Varior. There was a dinner at 9 P.M and the gathering dispersed after the usual vote of thanks.

V. R. SUBRAHMANIA AIYAR, *Secretary*.

மதுரை சுதேச வைத்திய சபா:—ஷை சபையின் ஆதரவில் நாளது 25—10—42 ஞாயற்றுக்கிழமை பகல் 5-மணிக்கு காக்காத் தோப்புத்தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ராமேசுவரம் தேவஸ்தான ஸமஸ்கிருத பாடசாலை பிரின்ஸ்பால் V. சுப்பிரமணியம் அவர்கள் B.A., L.T., தலைமை வகித்தார்கள். வாதரோகமும் ஸ்வேத சிகித்சையும் என்பதைப்பற்றி சர்ச்சை நடந்தது. காரியதரிசி.

பிரம்மி (மதுக்கூர் Dr. K ஷாரோடி)

இம்மூலிகையை முன்னாட்களில் ஏராளமாகவும் இந்நாட்களில் சாதாரணமாகவும் கேரளதேசத்தில் பிரஸவமான குழந்தைகளுக்கு கர்பஜலம் என்றும் கோழைக்கட்டை வெளிப்படுத்த உபயோகப்படுத்துகிறார்கள். இதன் ஸ்வரஸத்தில் தங்கத்தை உரைத்துக்கொடுக்க வாந்திமூலமாகக்கோழைகள்வெளிப்படுவதோடுமலஜலப்பிரவிருத்தியையும் உண்டுபண்ணுகிறது. நடுவாந்தரத்தில் தேவைப்படுமளவிலும் இதை மற்றும் பல தொந்தரவுகளுக்கும் கையாடி வருகிறார்கள். அனுபவ ஆராய்ச்சியில் இப்பிரயோகம் மூளையை வலுப்படுத்துவதாகிறது. இதுபோன்றப் பிரயோகம் வல்லாரையைக்கொண்டு செய்துவரக்காணோம். ஆகையால் பிரம்மி யென்பது வல்லாரையாகாதென்று என்று நம்பிக்கை. [illegible] வித்வான்களும் தங்கள் அபிப்பிராயத்தைச் சந்திரிகைமூலம் வெளிப்படுத்தவேண்டுகிறேன். கம்பந்துருய் என்ற வஸ்துவையும் இதன் நாமதேயமாகக் கூறப்படுவதாயறியவில்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 NOV 1942
MADRAS

ஹிருதயம்.

(Dr. V. அச்சுதன் நாயர் அவர்கள் L. I. M. [illegible])

திருச்சியில் போன வருஷம் நடைபெற்ற திராவிட வைத்திய மண்டலத்தின் த்விதீய ஸம்பாஷா பரிஷத்தில் படிக்கப்பட்டஸம்ஸ்கிருத வியாசத்தின் மொழிப்பெயர்ப்பும் அதில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் கொள்கைகளை சாஸ்திரமூலமாக நவீனக்கொள்கைகளைத்தழுவி கண்டனம்செய்தெழுதப்பட்ட வியாசமும் "சந்திரிகை"யில் பிரசுரமாகியிருப்பதைப் படித்துப்பார்க்கலானேன். அத்துடன் சில அம்சங்களில் என் புத்திக்கெட்டிய சில விஷயங்களையும் சேர்த்து யோசிப்பது வாசகர்களுக்குச் சாதகமாயிருக்குமென்றெண்ணுகிறேன்.

ஆங்கிலத்தில் "ஹார்ட்" (Heart) என்று சொல்லப்படும் உறுப்பைக்குறித்தே வடமொழியில் 'ஹிருதயம்' என்ற பதம் வழங்கப்பட்டுள்ளதென்று நாம் வெகுகாலமாக நினைத்துவந்திருக்கிறோம். நவீனபாட புஸ்தகங்களில் 'ஹார்ட்' என்பதை 'ஹிருதயம் என்று மொழிபெயர்த்துப் பள்ளிக்கூட மாணவர்களைக்கொண்டு கற்கச்செய்வதிலிருந்து அந்த வழக்கம் எவ்வளவுதூரம் வேரூன்றி நிற்கிறதென்று நன்கு புலனாகிறது. ஆனால் ஆயுர்வேத சாஸ்திரத்தில் பல விடங்களிலும் ஹிருதயமெனும் பதத்தைக் கையாண்டிருப்பதை கவனித்தால் அதன் பொருளானது "ஹார்ட்" என்ற உறுப்பினுள் சிக்கிவிடுமாயின் சாஸ்திராசாரியர்களின் கருத்தானது அநேக விடங்களில் நன்கு விளங்காமல் போய்விடுவதைக் காண்கிறோம். "ஹிருதயம்" என்ற பதத்திற்குச்சரீரத்தில் எந்த உறுப்பைப்பொருளாகக் கொண்டால் சாஸ்திரத்தின் பொருள் நன்கு விளங்குமென்பது பற்றி ஓர் தீர்க்க விசாரம் செய்வதே 'ஹிருதயரோக விசாரம்' என்ற வியாசத்தின் கருத்து. சுவாஸாசயங்களையும் 'ஹார்ட்' என்பதையும் சேர்த்து ஹிருதயமென்றும் சொல்வதே உசிதமாகுமென்று அந்த வியாசத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த வியாக்கியானம் சரியல்லவென்றும் 'ஹிருதயமென்பது 'ஹார்ட்' என்பதைத் தவிர வேறல்லவென்றும் ஸ்தாபித்துக்கொண்டு அநேக சாஸ்திரங்களிலிருந்தும் பிரமாணங்களெடுத்துக் காட்டியுள்ள வேறொரு வியாசமும் 'சந்திரிகையில் இப்பொழுது வெளிவந்திருக்கிறது. இந்த

210213

210213

இரண்டாவது வியாசத்தில் கண்டனத்திற்காக எடுத்துள்ள நியாயங்கள் எவ்வளவுதூரம் 'ஹார்டிற்கும்' ஹிருதயத்திற்கும்பொருந்துமென்று பார்ப்பதே இக்கட்டுரையின் விஷயமாகும். ஆனால் அநேக சாஸ்திர நிபுணரும் முக்கியமாக ஆயுர்வேத சாஸ்திரத்தின் கரை கண்டவருமான 'வைத்திய சந்திரிகா' பத்திராதிபருடையவாதத்தை மறுக்கமுடியுமென்ற மயக்கம் சற்றும் இக்கட்டுரையாளர்க்கில்லை என்பதை முதன் முதலாகச் சொல்ல விரும்புகிறேன். புதிதாக வெளியில் சுண்ணும்பு பூசப்பட்ட ஓர் சிறு கட்டிடத்தின் வெண்மையானது உலகெங்கும் அமிருத கிரணங்கள் வீசும் திங்களின் காந்தியை வெல்லமுடியுமா? ஆனால் சாத்கால பூர்ண சந்திரனின் வெண்ணிலாவானது அந்தக்கட்டிடத்தைப் பார்ப்பவர்கள்கண்ணுக்குமனோஹரமாக்கிச் செய்வதுபோல் பண்டிதலோகத்தில் பூர்ண சந்திரனைப் போல விளங்கும் 'சந்திரிகா' பத்ராதிபரின் ஞான கிரணங்கள் நிறைந்துள்ள 'சந்திரிகை'யின் ஸம்பந்தத்தால் அந்தஸ்ஸாரவிஹீனமான இச்சிறு கட்டுரையானது வாசகர்களுக்குச் சிறிதேனும் கௌதுகத்தைத் தருமாயின் இந்த சிரமமானது வீண் போகாது. 'ஹார்ட்' என்ற ஆங்கிலச்சொல்லும் ஹிருதயமென்ற வடமொழிச் சொல்லும் நெருங்கிய சம்பந்தமுடையனவ யாகையால் அவை இரண்டும் ஒரே உறுப்பைக்குறிப்பதாக முன்சொன்ன வியாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயுர்வேதத்தில் ஹிருதயமென்றழைக்கப்பட்டுள்ள உறுப்பை ஆங்கிலத்திலும் அதே பெயரால் அழைக்க வேண்டுமென்று நினைத்ததுதான் இந்த சம்பந்தத்திற்குக் காரணமென்று சொல்லவேண்டும். 'ஹார்ட் என்பதை "ஹிருதய"மாகக் கொண்டால் சாஸ்திரார்த்தம் நன்கு விளங்காமலிருப்பதைக் கண்டு தான் ஹிருதயத்தின் பொருளைப்பற்றி மறுபடியும் சர்ச்சை செய்ய நேர்ந்ததென்ற உண்மையை மறந்துவிட்டு ஹிருதயத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆசிரியரின் இஷ்டத்தை அல்லது கருத்தை ஹிருதய நிர்ணயம் செய்வதற்குப்பிரமாணமாகக்கொள்வதுசரியல்ல மூன்றுவதான ஓர் பதத்திலிருந்து இரண்டு பதங்களும் உண்டானவை என்று சொல்லமுடியுமானால் இரண்டிற்குமுள்ள ஒற்றுமைக்கு ஏதுவான அந்த பதத்தின் அம்சத்தை கொண்டாவது 'ஹார்ட்' ஹிருதயம் என்றும் பதங்களின் சம்பந்தமானது பிரமாண பூர்வகமென்று சொல்லலாம். ஆனால் அப்படி ஓர் பதமிருப்பதாகத் தெரியவில்லை. மேலும், ஆயுர்வேதத்தின் பெருமையையும் அதன் உண்மையான தத்துவங்களையும் சற்றேனும் மதியாமல் கேவலம் பௌதிக தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு முளைத்து வளர்ந்தோங்கிவரும் நவீன வைத்திய சாஸ்திரத்திற்கு ஆயுர்வேதத்தில் ஹிருதயத்தின் பொருளாகச் சொல்லியுள்ள உறுப்பை அதற்கு ஒப்பான பெயரைக்கொண்டே அழைக்கவேண்டுமென்ற ஆவல் ஏற்படுவது நினைக்கமுடியாத காரியம். ஆயுர்வேதத்தோடு ஓர் சலுகை காட்டுவதற்காகவே ஹிருதயத்தை மொழிபெயர்த்தவர் அதை 'ஹார்ட் என்றழைத்தாரென்று நினைத்தாலும் ஹிருதய பதத்தின் யதார்த்தப் பொருளைப்பற்றி அவர் ஆவலுடையவராக விருக்கக் காரணமில்லை. ஏனென்றால் ஹிருதயத்தின் பொருளாக வுள்ள உறுப்பின் ஓர் குறிப்பிட்ட பாகத்தை 'ஹார்ட்' என்றும் மற்றபாகத்தை வேறு பெயராலும் அழைப்பதால் ஏற்படும் சாஸ்திர வித்தியாசமானது நவீன வைத்திய சாஸ்திரத்திற்கு ஓர் குறையாக விருக்க முடியாது. ஆங்கிலத்தில் "Gullet" என்ற சொல்லும் வடமொழியில் "களம்" என்ற சொல்லும் நெருங்கிய சம்பந்தமுடையவை "Gullet" என்பது ஆங்கிலத்தில் அன்ன நாளத்தைமட்டும் குறிக்குர் பெயராகும். இதைக்கொண்டு 'களம்' என்பதற்கு அன்ன நாளம் என்று அர்த்தம் சொல்லமுடியுமா", இதுபோல 'ஹார்ட்' என்பது ஹிருதயத்தின் ஓர் பாகத்தைக் குறிக்குமேதவிர முற்றிலும் ஹிருதயத்தின் பொருளாகவில்லை என்று கொள்வதில் பிசகொன்றுமில்லை. இரண்டாவதாக 'ஹார்டிற்கும்' ஹிருதயத்திற்கும் தொழில் பொருத்தமுண்டென்பதைக் காட்ட "தசமூலஸிரா ஹிருத்ஸ்தாஸ்தாஸ்ஸர்வம் ஸர்வதோவபு:ரஸாத்மகம் வஹந்த்யோஜ: தந்நிபத்தம் ஹிஜீவிதம்" என்ற பிரமாண வசனம் கூறப்பட்டிருக்கிறது. இந்த பிரமாணமானது 'ஹிருதயரோக விசார' மென்ற வியாசத்தில் சொல்லியுள்ள ஹிருதய வியாக்கியானத்தைக் கண்டிக்க இயலாது ஏனென்றால் அந்த வியாசமானது சுவாஸாசயத்தையும் சேர்த்து ஹிருதயமாகக் கொண்டிருப்பதால் 'ஹார்டின் தனிப்பட்ட தொழில் முழுதும் ஹிருதயத்தின் தொழிலாகவே முடிகின்றது.

இருந்தாலும் மேற்சொன்ன வசனமாவது 'ஹார்ட்' என்ற உறுப்பிற்கு எவ்வளவுதூரம் பொருந்துமென்று பார்ப்பது அவசியமே. இங்கே 'ஹார்டை'ப்பற்றிச் சற்று சிந்திப்போம். 'ஹார்ட்' என்பது இரண்டு சுவாஸாசயங்களின் நடுவில் கொஞ்சம் இடதுபாகமாக உரஸ்ஸின் மத்தியில் அமைந்துள்ள கட்டியானதும் திரிகோணாகாரமானதுமான ஓர் உறுப்பாகும். அதை அறுத்துப்பார்த்தால் உள்ளே மிக அழகான நான்கு அறைகள் உள்ளதாகக் காணலாம். ஒவ்வொரு அறைக்கும் தனித்தனித் தொழிலும் ஆங்கிலத்தில் தனித்தனிப்பெயரும் இருக்கின்றன. ஆக மொத்தம் அதில் எட்டு இரத்தக்குழாய்கள் சம்பந்தப்பட்டு நிற்கின்றன. ஓர் பிரத்யேகமான கட்டுப்பாட்டிற்கும் வரிசை கிரமத்திற்கும் வழிப்பட்டு இந்த இரத்தக்குழாய்கள் வழியாக அதன் அறைகளில் இரத்தமானது நிரம்பியும் வெளியே கிளம்பிக்கொண்டுமிருக்கின்றது. அதன் ஸங்கோசவிகாஸ விகாஸத்தன்மையினாலேயே இந்தத் தொழில் நடைபெறுகின்றது. ஓர் குறிப்பிட்ட சமயத்தில் இவ்வளவு தடவை அது ஸங்கோசங்களை அடையுமென்றும் ஒவ்வொரு தடவையும் இவ்வளவு இரத்தம் வெளியே செல்லுமென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. சரீரத்தின் நானாபக்கங்களிலிருந்தும் அசுத்த இரத்தமானது குழாய்மார்க்கமாக அதை அடைந்து பிறகு சுவாஸாசயங்களில் சென்று சுத்தமாக்கப்பட்டு திரும்பியும் அதனுள் வந்துசேர்ந்து மறுபடியும் சரீரத்தின் நானாபாகங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இத்தகைய 'ஹார்ட்' என்னும் உறுப்பிற்கு முன்சொன்ன வசனத்தில் சொல்லியுள்ள லக்ஷணங்களும் தொழிலும் எம்மாத்திரம் பொருந்துமென்பதை சொல்லவேண்டியதில்லை. "தசமூலஸிரா" என்பதில் விசேஷணத்தை அப்படியே விட்டுவிட்டாலும் கூட ரஸத்தையும் ரக்தத்தையும் ஓஜஸ்ஸையும் ஒன்றுசேர்த்துக் குழப்பினால் தான் 'ஹார்டி'ன் தன்மைக்கு அது ஓரளவு பொருந்துமென்று காணப்படுகிறது. ஆனால் ஹிருதயமென்பதற்கு சுவாஸாசயமும் 'ஹார்டும்' என்று பொருள் கூறுவதாயிருந்தால் வாகட வசனத்தை இவ்வளவுபாடுபடுத்த வேண்டியிராது. இரத்தத்திலிருக்கும் சுவேதாணுக்களும் ரக்தாணுக்களும் போக மீதியுள்ள திரவபதார்த்தம் ரஸமெனப்படும். ஆங்கிலத்தில் இதற்கு Blood plasma என்றும் சிலவிடங்களில் Lymph என்றும்

பெயர். இதுவே ரஸதாதுவாகும். ஓஜஸ்ஸென்பது நவீனமதம் அனுஸரித்துள்ள Oxygen ஆகும். சப்தஸாதிருச்யத்தைக்கொண்டும் தொழில் பொருத்தத்தைக்கொண்டும் "தந்நிபத்தம் ஹிஜீவிதம்" என்ற விசேஷணத்தைக் கொண்டும் ஓஜஸ்ஸென்பதற்கு Oxygen என்று அர்த்தங்கூறுவது பொருந்தும். "ஹிருதயமானது ஜீவிதத்திற்கு இன்றியமையாததான ஓஜஸ்ஸை ரஸதாதுவுடன் கலந்து வகித்துக்கொண்டு இரத்தக்குழாய்கள் வழியாக சரீரமுழுதும் வியாபிக்கச்செய்கின்றது" என்று வாகட வசனத்திற்குப் பொருள். "தசமூலஸிரா" வென்றதின் பொருளானது 'ஹார்டி'ற்கு முற்றிலும் பொருந்தாதென்பது வெளிப்படை. ஆனால் 'ஹார்டை'யும் சுவாஸாசயத்தையும் ஹிருதயமாகக் கொண்டால் அதுவும் பொருந்துமென்பதில் சந்தேகமில்லை. ஆகவே ஹிருதயமென்பதை 'ஹார்ட்' என்று ரூபிக்க மேற்சொன்ன வசனங்கள் பிரமாணங்களாகா. அடுத்தாப்போல புண்டரீகமென்பது செந்தாமரையைக் குறிக்கின்றதென்றும் வெண்தாமரை என்று அதற்கு அர்த்தம் கொண்டுள்ளது சாஸ்திர விரோதமென்றும் ரூபிக்கும் பொருட்டு அநேக சாஸ்திரங்களிலிருந்தும் வேத நூட்களிலிருந்தும் பிரமாணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த வர்ணத்தைக் குறித்துள்ள கட்டுரையை நீட்டுவது அநாவசியமென்றும் நினைக்கிறேன். ஏனென்றால் புண்டரீகமென்பது செந்தாமரையே ஆனாலும் அது 'ஹார்ட்'டின் நிறத்தை பாதிப்பதில்லை என்று இரண்டையும் நேரில் பார்த்தவர்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. 'ஹிருதயரோக விசார'மென்ற வியாசத்தில் கூறியுள்ள "ஆபாண்டு" என்ற பதத்திற்கு ஈஷத்ஸிதம்" என்றுதான் அர்த்தம். அது சுவாஸாசயங்களின் வர்ணத்திற்கு முற்றிலும் பொருந்துமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் புண்டரீகத்திற்கு வெண்தாமரை என்று அர்த்தம் சொல்வது தவறாகவே இருந்தாலும் அதன் நிறத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பானது சுவாஸாசயங்களும் 'ஹார்டு'ம் சேர்ந்ததேயாகும் என்பதில் சந்தேகத்திற்கு வழியில்லை. இங்கே புண்டரீக குஷ்டத்தைச் சொல்லும் "சுக்ல ரக்தாவபாஸானி ரக்தபர்யந்தானி ரக்தஸிரா ராஜீ ஸந்ததானி" "ஸச்வேதம் ரக்தபர்யந்தம் புண்டரீகதளோபமம்" என்றிவ்விதமான சாஸ்திர வசனங்களும் அதனால் வெளியாகும்

யுக்திகளும் விஸ்தாரபயத்தால் எடுத்துக் காட்டுவதற்கில்லை. அடுத்ததாக "ஹிருதயம் மநஸஸ் ஸ்தானம் இத்யாதி வசனங்களும் அவையின் பொருளும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஹிருதயமென்பது ஆங்கிலத்தில் சொல்லும் "ஹார்ட்" என்பதுதான் என்று ரூபிக்க இரண்டிற்கும் பொதுவாகச் சொல்லப்பட்டுள்ள லக்ஷணங்களையும் தருமங்களையும் எடுத்துக்காட்டுவது அவசியமே. ஆனால் ஆங்கிலேயருடைய 'ஹார்ட்'டிற்கு ஒரு விதத்திலும் பொருந்தாதவையான 'மநஸ்ஸினுடைய ஸ்தானமென்றும் 'யோகப்ரத்யக்ஷ ஜோதிஸ்தானாதார' மென்றும் இன்னும் அநேக ஸூக்ஷ்மதர்மங்களுடையதென்றும் சொல்வது பிரகிருதத்தில் பிரயோஜனமற்றது 'ஹிருதயம்' என்ற உறுப்பு யாது" என்ற கேள்விக்கு பதில் தேடும்போது அதற்குச் சொந்தமானதாயிருந்தாலும் அறிந்துகொள்ள முடியாததும் அநிர்வசனீயமும் அனுபவைகவேத்யமுமான லக்ஷணங்களைக் கொண்டும் தருமங்களைக்கொண்டும் அதை விசேஷிப்பது "ஹிருதயமென்றால் ஹிருதயமென்று பொருள்" என்று சொல்லுவதுபோலாகும்.

'ரஸோர்ய: ஸ்வச்சதாம் யாத: ஸகத்ரைவா வதிஷ்டதே"
"வ்யானோ ஹ்ருதிஸ்தித:! "பிராணோத்ர மூர்த்தக:|உரகண்டசர." "உரஸ்தான முதானஸ்ய" "கபஸ்ய ஸுதராமுர:" என்னும் பிரமாண வசனங்கள் ஒரு விதத்திலும் "ஹார்ட்டை" ஹிருதயபதார்த்தமாகப் போதிப்பனவல்லவென்று மேற்சொன்ன காரணங்களால் வெளிப்படுகிறது. பிறகு 'உரஸ்' என்பதற்கு சுவாஸாசயங்களென்று பொருள் கூறப்பட்டுள்ளதை கவனிப்போம். தலையில் இருக்கும் பிராணவாயு உரஸ்ஸில் சஞ்சரிப்பதனாலும் நாசித்துவாரங்களில் சஞ்சரிக்கும் உதான வாயுவானது உரஸ்ஸில் இருப்பதனாலும் உரஸ்ஸென்பது சுவாஸாசயமே யாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மேற்சொன்ன காரணங்கள் 'உரஸ்' என்பதற்கு சுவாஸாசயம்மட்டும்தான் அர்த்தமென்று சொல்வதற் காதாரமாயிருக்கவில்லை. 'உரஸ்' என்பது 'உதரம்' என்பதுபோல சரீரத்தில் ஓர் குறிப்பிட்ட பிரதேசத்தைக் குறிக்கின்றது. கழுத்திற்குக்கீழ் உதரத்திற்கு மேலேயுள்ள உடம்பின் பாகத்தை வடமொழியில்

'உரஸ்' என்றும் ஆங்கிலத்தில் "Thorax" என்றும் அழைத்து வருகிறது. இந்த 'உரஸ்ஸின் பொருளில் ஹிருதயமும் (சுவாஸாசயமும் 'ஹார்டும்') சுவாஸநாளமும் அன்னநாளமும் அநேக ஸிரைகள் முதலியவைகளும் இவை எல்லாவற்றையும் சேர்த்து அடைத்துக்கொண்டிருக்கும் பார்சுவாஸ்திகளும் மாமிச பேசிகளும் நிறைந்துள்ள பித்தியும் அடங்கியிருக்கின்றன. "உரஸ்யந்த: க்ஷதே" என்ற வசனத்தில் க்ஷதத்திற்கிருப்பிடமான சுவாஸாசயத்தைக் குறிக்கும்பொருட்டு 'அந்த:' சப்தத்தையும் சேர்த்து 'உரஸ்' என்பதை பிரயோகித்திருப்பதால் அதற்கு சுவாஸாசயம் மட்டும் பொருளல்லவென்று விளங்குகிறது. க்ஷதகாஸ நிதானத்தைப் பற்றிச் சொல்லும்போது 'ஹிருதய விதாரணேன" என்று மதுகோச வியாக்யானத்தில் சொல்லப்பட்டுள்ளதும் இங்கு கவனிக்கத் தக்கதே. "உரஸ்த: குருதேகாஸம்" எனும் வசனமும் மேற்சொன்னதைத்தான் வற்புறுத்துகின்றது. அடுத்தபடியாக "ஹிருதயம் புண்டரீகவத்" என்ற பிரயோகத்தின் ஸ்வாரஸ்யத்தை மேற்கொண்டு உவமாலங்காரத்தைப்பற்றி ஓர் தீர்க்க நிருபணம் செய்யப்பட்டிருக்கிறது. பிரகிருதத்தில், ஹிருதயத்தை 'ஹார்ட்' என்று ரூபிப்பதில் இது எவ்வளவு தூரம் ஸஹாயகமென்பதை விரைவில் காண்போம். உபமானகதமான தருமங்கள் முழுதும் பொருந்தக்கூடிய ஏகஜாதியவஸ்துவில் உவமாலங்காரம் தங்குமாவென்றும் ஸமான தருமத்தைச்சொல்லாத விஜாதீய வஸ்துக்களின் உவமையில் எதைக்கொண்டு தருமக்கிரஹணம் செய்வதென்றுமுள்ள கேள்விகள் ஒருபுறமிருக்க மேலே சொல்லப்பட்டுள்ள "ஹிருதயம் புண்டரீகவத்" எனும் வசனத்தில் அலங்காரமுண்டாவென்று பார்க்க வேண்டியிருக்கிறது, இந்த வாக்கியத்தில் அலங்காரத்துவாவச்சேதகமான சமத்காரம் இல்லை என்பது திண்ணம். "ஹிருதயமானது செந்தாமரையின் உருவத்தையும் அதன் ஸங்கோசவிகாஸத் தன்மையையுமுடையது" எனும் சொல்லானது ஸஹிருதயாஹ்லாதத்தைத் தருவதில்லை. 'ஹிருதய' மென்பது லக்ஷியமும் 'புண்டரீகவத்' என்பது லக்ஷணமுமே யாகும். ஹிருதயத்தை மற்ற உறுப்புகளிலிருந்து வேறாகத்தெரிவிப்பதே இந்த லக்ஷணத்தின் பிரயோஜனம் "சந்திர இவ முகமாஹ்லாதகம்" என்பதில் சந்திரஸாதிருச்யத்

தை முகத்தின் லக்ஷணமாகக் கூறுவது அசம்பத்தம்." "முகமானது சந்திரனைப்போல் ஆனந்தத்தைக் கொடுக்கின்றது" என்று சொன்னால் மற்ற பதார்த்தங்களிலிருந்து முகத்தை வேறாக அறிந்துகொள்ள முடியாது. ஸமான தருமத்தின் மூலமாக கேட்பவர்களுக்கு ஓர் மனமகிழ்ச்சியை உண்டாக்குவதே 'முகம் சந்திரவத்' என்ற வசனத்தின் கருத்தாகும். இந்த மகிழ்ச்சிக்கு ஏதுவான தருமத்தை சமத்காரகாரித்துவமென்றும் இந்த தருமமானது அலங்கார வாக்கியங்களுக்கு இன்றியமையாததென்றும் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. "ஹிருதயம் புண்டரீகவத்" என்ற வசனத்தில் இந்த தருமமில்லாததால் அதில் அலங்காரமே கிடையாதென்பது வெளிப்படை. "கோ ஸதிருசோ கவய:" என்ற ஞானமானது கவயத்தைப் பார்க்காத ஒருவனுக்கு அதைத்தெரிந்துகொள்ள ஓர் வழியாகவிருப்பதுபோல "புண்டரீகவத் ஹிருதயம்" என்ற ஞானமானது ஹிருதயத்தைப் பார்க்காத ஒருவனுக்கு மற்ற உறுப்புகளிலிருந்து அதை வேறாகத் தெரிந்துகொள்ளப் பிரசித்த புண்டரீக தர்மஸ்மரண பலத்தால், உதவுகின்றது. ஆகவே அந்த வசனத்தின் பொருளானது உவமானப் பிரமாண வாயிலாகத்தான் விளங்குகின்றதே தவிர உவமாலங்காரத்தாலல்லவென்பதில் சந்தேகமில்லை. "புண்டரீகவத்" என்ற உவமையினாலும் 'ரக்தபத்மாகாரம்' என்ற விசேஷணத்தாலும் 'ஹார்ட்' என்னு சொல்லப்படும் ஹிருதயமானது ஸங்கோச விகாஸத்தன்மையுடையதும் செந்தாமரையின் உருவத்தைக்கொண்டது மென்று சொல்லப்பட்டிருப்பதை கவனிப்போம். ஹிருதயத்தின் ஸங்கோச விகாஸங்களை நேராகக் குறிக்கும் "ஜாக்ரதஸ்தத்விகஸதிஸ்வபதச்ச நிமீலதி" என்ற வசனமானது "ஹார்ட்" என்ற உறுப்பிற்கு முற்றிலும் பொருந்தாமையால்தான் அதை சாக்ஷாத் பிரத்யக்ஷமல்லவென்று சொல்ல நேர்ந்தது. மேலும் ஆங்கிலேயருடைய 'ஹார்ட்' என்ற உறுப்பின் முக்கிய தருமமான சாக்ஷாத் பிரத்யக்ஷவும்பிராதிக்ஷணிகவுமான ஸங்கோச விகாஸங்களை சற்றேனும் குறிப்பதான ஒரு வார்த்தையும் ஆயுர்வேத ஹிருதய தருமங்களினிடையே சொல்லக்கிடையாது. ஆகையால் புண்டரீகத்திற்கும் ஹிருதயத்திற்குமுள்ள பொருத்தத்தை உரைக்கும் வசனமானது 'ஹார்ட்டை'யும் ஹிருதயத்தையும் ஒன்றுபடுத்துவதில் விவக்ஷிதமல்ல

வென்று வெளிப்படை. மேலும் "ரக்த பத்மாகார" மென்றவிசேஷணமானது 'ஹார்ட்" என்ற ஹிருதயத்தின் ஆகிருதியையும் வர்ணத்தையும் காட்டுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் செந்தாமரையின் வர்ணமும் "ஹார்டி'ன் வர்ணமும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வித்தியாசமானதென்று மேலே கூறினோம். ஆகிருதி ஸாம்யத்தைக் காட்டும் 'பத்ம' பதமானது அதன் நாளவத்துவத்தையும் தளவத்துவத்தையும் கூறுவதற்காகச் சொல்லவில்லையாம். இப்படி பார்த்தால் விவக்ஷிதமல்லாத ஸங்கோச விகாஸத்துவத்தையும் பொருந்தாத ரக்தவர்ணவத்துவத்தையும் உத்திஷ்டங்களல்லாத நாளவத்துவ தளவத்துவாதிகளையும் ரக்த பத்மத்திலிருந்து விலக்கினபிறகு தத்வச்சேதகமான தரும விசேஷமொன்று மீதியிருக்குமாயின் அதை 'ஹார்ட்' எனும் உறுப்புடன் ஒப்பிடலாமென்று கிடைக்கின்றது.

இனி சுவாஸாசயங்களையும் 'ஹார்ட்'டையும் ஹிருதயமாகக் கொண்டால் மேற்சொன்ன வசனங்கள் பொருந்துமாவென்று பார்ப்போம். ஆனால் இங்கே சுவாஸாசயத்தைப்பற்றிச் சற்று சிந்திப்பதவசியமாகயிருக்கிறது. நாமுட்கொள்ளும் வாயுவானது நாசித்துவாரங்கள் வழியாக கண்டத்தில் அமைந்துள்ள ஓர் குழாயில் செல்லுகின்றது. இந்த குழாய்க்கு சுவாஸநாள (Trachea) மென்று பெயர். இந்தக்குழாயானது இரண்டு தனிக்குழாய்களாக (Bronchi) வகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் இடதும் வலதும் நோக்கி உரஸ்ஸின் கீழே செல்லுகிறது. இவை கீழே செல்லச்செல்ல ஓர் மரத்தின் கொம்புகளிலிருந்து புது புதுக் கிளைகளும் இலைகளும் கிளம்புவது போல அநேகம் சிறு சிறு குழாய்களாக வகுக்கப்பட்டுக் கடைசியில் எண்ணிறந்த சிறு கோச (alveoli) ங்களாக முடிகின்றன. வாயுவானது சுவாஸ நாளத்திலிருந்து முன் சொன்ன சிறு குழாய்கள் வழியாக உரஸ்ஸிற்குள் நாலாப்பக்கமும் பரவிக்கிடக்கும் சுவாஸ கோசமெனும் சிறு பையை அடைந்து அங்குள்ள இரத்தக்குழாய்களுக்குள் புகுந்து இரத்தத்தை சுத்தமாக்குகின்றது. சுவாஸநாளத்திலிருந்து புறப்பட்ட வாயுவானது கடைசியாக இரத்தத்தில் கலந்துகொள்வதற்குமுன் எந்தெந்தப்பிரதேசங்களில் சஞ்சரிக்கின்றதோ அந்தப் பிரதேசத்திற்கு சுவாஸாசயமென்று பெயர். 'ஹார்ட்'

2/0213

என்றது இரண்டு பார்சுவங்களிலும் பரவிக் கிடக்கும் சுவாஸாசயங்களுக்கு நடுவில் அமைந்துள்ளதாக முதலில் கூறினோம். இடது பக்கத்திலுள்ள சுவாஸாசயமானது இந்த 'ஹார்டை' முக்காலும் மூடிக்கொண்டிருக்கிறது. சுவாஸநாளத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் சுவாஸகோசங்களையும் மத்தியிலுள்ள 'ஹார்டை'யும் சேர்த்துப் பார்வையிடும்போது உண்டாகும் பிரதீதியின் உருவத்தை ஓர் புண்டரீகத்துடனல்லாமல் வேறு வஸ்துவுடன் ஒப்பிடுவது பொருந்தாது. சுவாஸநாளத்தைப் புண்டரீக நாளமாகவும் அதனோடு சம்பந்தப்பட்டுப் பரவிக்கிடக்கும் மெல்லியதும் மெதுவானதுமான சுவாஸகோசங்களைத் தளங்களாகவும் அவைகளின் நடுவில் கட்டியாகவும் மொத்தமாகவுமுள்ள திரிகோணாகாரமான 'ஹார்ட்' என்பதை கர்ணிகையாகவுங் கொள்வது பொருந்தும். வெள்ளை நிறமான மெதுவானமாம்ஸ பேசிகளால் அமைக்கப்பட்டுள்ள இந்த சுவாஸாசயமானது முற்றிலும் சிறு இரத்தக்குழாய்களால் நிரம்பப்பட்டுள்ளதால் அதை ஓர் செந்தாமரையுடன் ஒப்பிடுவதும் பொருந்தும். தாமரை தளங்கள் அதன் நாளத்தை விட்டுக் கிளம்பும்போது வெளிப்பாகத்தை நோக்கி விஸ்தாரமாகச் செல்வது போல் சுவாஸநாளத்தைவிட்டு கீழே வரவர சுவாஸாசயமானது விஸ்தாரமாகவும் உரஸ்ஸின் பித்திகையை நோக்கியும் செல்லுகின்றது. ஆகையால் இதைத்தலைகீழாகக்கொண்ட ஓர் செந்தாமரையுடன் (ரக்தபத்மாகாரமதோமுகம்) உவமித்திருக்கிறது. தாமரையின் தளங்கள் அதன் கர்ணிகையில் சம்பந்தப்பட்டுள்ளது போல சுவாஸாசயமானது 'ஹார்ட்' என்பதில் சம்பந்தப்பட்டிருக்காதலால் உவமை சரியல்லவென்று சொல்லமுடியாது. சுவாஸாசயங்களும் 'ஹார்டு'ம் சேர்ந்து (ஹிருதயம்) பார்வைக்கு எப்படியிருக்குமென்று காட்டுவதற்காகவே எடுத்துக்கொண்ட இந்த உவமானம் பரிசோதனையில் முற்றிலும் பொருந்தவில்லை என்று குறை கூறுவது "திருஷ்டஹானதிருஷ்டகல்பனா" வென்ற தோஷமேயாகுமென்று சொல்லலாம். மேலும், விஜாதீய வஸ்துக்களில் உவமானகதமான தருமங்களைத்தும் உபமேயத்தில் எதிர்பார்ப்பது அனுபபன்னமென்று சொல்லப்பட்ட நியாயமானது இந்த அம்சத்தில் மட்டும் செல்லுபடியாகாமலிருக்கக் காரணமில்லை, ஆகையால் புண்டரீகோபமையானது

சுவாஸாசயங்களையும் 'ஹார்டை'யும் சேர்த்த ஹிருதயத்திற்கு முற்றிலும் பொருத்தமாகவிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஹிருதயத்தின் ஸங்கோச விகாஸத்தன்மையானது சுவாஸாசயங்களுடன் சேர்ந்த 'ஹார்டி'ற்குப்பொருத்தமாயிருப்பதைக் குறித்துச்சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் இக்கட்டுரையானது மிகநீண்டுபோகுமென்று கருதி அந்த விஷயத்தை ஓர் தனி வியாசத்தில் விவரிக்கலாமென்று நினைத்து இந்த உவமா வாதத்தை விட்டு அடுத்ததைக் கவனிப்போம். சுவாஸாசயங்களும் 'ஹார்டு'ம் சேர்ந்துள்ள 'ஹிருதய' மானது ஸமஷ்டிவாசகமான பதமாகையால் "உத்காட்ய யோக கலயா ஹிருதயாப்ஜ கோசம்" எனும் வசனத்தில் வ்யஷ்டி வாசகமாகவுள்ள ஹிருதயத்திற்கு விரோதமானதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வ்யஷ்டிஸமஷ்டி வாதமானது ஆங்கிலத்தில் வ்யஷ்டி வாசகமாகக்கொண்ட 'ஹார்ட்டை' அதிஷ்டானமாகக்கொண்டதென்பதில் சந்தேகமில்லை. இதன் முடிவு எப்படியாகிலும் "உத்காட்ய" இத்யாதி வசனத்தில் சொல்லப்பட்டுள்ள கும்பக பிராணயாமாதி யோகாப்யாசத்தால் திறந்து வைக்கவேண்டிய ஹிருதயாப்ஜகோசமானது வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள ஹிருதயமல்லவென்றும் இடா, பிங்களா, ஸுஷும்நா என்றும் நாடிகளுடன் சம்பந்தப்பட்டு மூலாதாரத்தில் அமைந்துள்ள வேறொரு ஹிருதயத்தைத்தான் முன்சொன்ன வசனத்தில் கூறியுள்ளதென்றும் யோக சாஸ்திரத்தில் காணலாம். முன்சொன்ன வசனமானது வைத்திய ஹிருதயத்திற்குப் பொருந்தவேண்டுமானால் 'ஹிருதயாப்ஜகோச'த்தை சுவாஸகோசங்களாகக் கொண்டால்தான் முடியுமென்பதில் சந்தேகமில்லை. யோகிப்ரத்யக்ஷ திருச்யமான பரமாத்ம சாக்ஷாத்காரமானது 'ஹார்ட்' என்பதுபோல ஓர் குறிப்பிட்ட உறுப்பில்தான் முடியுமென்றும்" தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம்" என்ற உபநிஷத் வாக்கியப்படி சாக்ஷுஷப் பிரத்யக்ஷாதீதமான 'துவாரமானது' 'ஹார்டி'ல் தான் இருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. யோகிமாத்திர திருச்யமான ஓர் ஸூக்ஷ்மாதிஷ்டானத்தை ஹிருதய நிர்ணயகாலத்தில் யோகிகளல்லாதார் லக்ஷணமாகக்கொள்வதில் பயனென்ன? ஆங்கிலத்தில் சொல்லும் 'ஹார்ட்' என்ற உறுப்பிற்கு இந்த லக்ஷணமானது பொருந்தவே பொருந்தாது.

ஆயுர்வேதத்தில் சொல்லியுள்ள ஹிருதயத்திற்கு இது பொருந்துமானால் மேற்சொன்ன ஸூக்ஷ்மாதிஷ்டானமானது 'ஹார்'டைவிட்டு சுவாஸாசயங்களில் தான் இருப்பதென்று சொன்னால் யாரால் மறுக்கமுடியும்? 'ஹார்டி'ல்தான் இருப்பதென்று சொல்வது, சாக்ஷுஷ பிரத்யக்ஷமல்லாத மாதுரியமானது சர்க்கரை என்ற வஸ்துவின் ஓர் குறிப்பிட்ட அளவில்தான் இருக்கிறதென்று சொல்வதுபோலாகும் ஆப்த வசனத்திலுள்ள நம்பிக்கையால் இந்த லக்ஷணத்தை அங்கீகரித்தாலுங்கூட அது சாக்ஷுஷ பிரத்யக்ஷங்களான இதரலக்ஷணங்கள் பொருந்துமிடத்தில்தான் பொருந்தும் இந்த இடமானது 'ஹார்ட்' மட்டுமல்லவென்றும் சுவாஸாசயங்களும் 'ஹார்டு'ம் சேர்ந்ததே யாகுமென்றும் மேலே ரூபித்துள்ளது மேலும், "தஸ்யாந்தே" எனும் வசனத்தின் பொருளாக 'ஹார்ட்' என்பதின் கடைசியில் இந்திரிய கிராஹ்யமல்லாத ஓர் ஸூக்ஷ்மத்துவாரமுண்டென்று சொல்வதைக் காட்டிலும் அதற்கு சுவாஸாசயங்களின் கடைசி பாகத்துள்ள ஸூக்ஷ்மத்துவாரங்களான கோசங்களென்று சொல்வதே உசிதமாகும்.

கடைசியாக "ஸப்தசாதாரா:" இத்யாதி வசனப்படி 'ஹார்ட்' என்பதை ரக்தாசயமென்றும் சுவாஸாசயத்தை கபாசயமென்றும் அர்த்தம் கூறி அதுவழியாக ஹிருதயமும் சுவாஸாசயங்களும் வேறென்று சொல்லப்பட்டிருக்கிறது. சரீரத்தின் நானாபாகங்களிலிருந்தும் அசுத்த ரக்தமானது குழாய் மார்க்கமாக 'ஹார்ட்'டென்பதை அடைந்து பிறகு அதினின்றும் சுவாஸாசயங்களில் பரவிக்கிடக்கும் எண்ணிறந்த சிறு ரக்தக்குழாய்களில் தங்கி அங்கு பிராணவாயுவிலுள்ள ஓஜஸ்ஸுடன் கலந்து சுத்தமாக்கப்பட்டு குழாய்வழியாகத் திரும்பி 'ஹார்டி'ல் வந்துசேர்ந்து மறுபடியும் சரீரத்தின் நாலாபக்கங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இந்தத்தொழிலானது ஊரிலுள்ள அழுக்குத்தண்ணீரானது ஓடை வாய்க்கால் முதலானவை வழியாக ஓர் பெரிய ஏரியில் நிரம்பி அங்கு சில ஔஷதங்கள் மூலமாக அதன் அழுக்கை நீக்கின பிறகு யந்திரத்தின் (Pumping Machine) சகாயத்தால் குழாய்வழியாக மறுபடியும் நகரத்தின் நானாபாகங்களுக்கும் அனுப்பப்படுவது போலாகும்.

இந்த உவமானத்தில் கூறியுள்ள ஏரியானது ஜலாசயமெனும் பெயருக்கு எப்படி பொருத்தமாகவிருக்கின்றதோ அதுபோல முன்சொன்னதில் சுவாஸாசய பித்திகளில் வலைபோல நெருங்கிப் பரவிக்கிடக்கும் இரத்தக்குழாய்கள் ரக்தாசயமென்ற பெயருக்குப்பொருத்தமானவை இயந்திரமானது ஏரியிலுள்ள ஜலத்தை நகரத்தின் நானாபாகங்களுக்கும் அனுப்புவது மட்டும் தொழிலாகக் கொண்டிருப்பது போல 'ஹார்ட்' என்பதும் சரீரத்தின் நானாபாகங்களுக்கும் இரத்தத்தை அனுப்புவதற்கு ஓர் கருவியாக மட்டும் இருக்கிறது. இதிலிருந்து 'ஹார்ட்' என்பது ரக்தாசயமல்லவென்று நன்றாக விளங்குகிறது. மேலும் "கோஷ்டாங்கானி ஸ்திதான்யேஷு ஹிருதயம் க்லோம புப்புஸம்" இத்யாதி வசனப்படி கோஷ்டத்தின் அங்கங்களாகிய ஹிருதயம் முதலிய உறுப்புகள் முன்சொன்ன ஏழு ஆசயங்களில் இருக்கின்றனவென்று தெரியவருகிறது. அப்படியானால் ரக்தாசயத்திலிருக்கும் ஹிருதயம் ரக்தாசயமாகவிருக்கமுடியாது. அடுத்தாப்போல் முதலில் சுவாஸாசயமென்று நிலைநாட்டப்பட்ட உரஸ்ஸை 'கபஸ்யஸ்தாமுர:' என்ற பிரமாணப்படி கபாசயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி மூன்றையும் (உரஸ், சுவாஸாசயம், கபாசயம்) கூட்டிக்குழப்பிக்கொண்ட இந்த வியாக்யானத்தில் "உரஸ்தானமுதானஸ்ய" என்ற பிரமாணத்திற்கு இடமிருக்காதென்றே நம்பவேண்டியிருக்கிறது.

கடைசியாக இன்னும் ஒரு விஷயம். தருமார்த்த காமமோக்ஷமென்று வடமொழியில் சொல்லப்படும் நான்கு புருஷார்த்தங்களை முன்னிட்டு நம் முன்னோர்களால் இயற்றப்பட்டுள்ள நூல்களானது என்றைக்கும் அழியாத சாஸ்திரங்களாக விளங்குகின்றன. பரம புருஷார்த்தமென்று சொல்லப்படும், மோக்ஷத்தை நேராகக்குறிக்கும் வேதாந்த நூட்கள் ஆத்மஞானத்தையும் துறவறத்தையும் வற்புறுத்துகின்றன. மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் மேற்கொண்டுள்ள நூட்கள் மக்களுக்கு ஒழுங்கான நடத்தையும் இல்லறத்தையும் வற்புறுத்துகின்றன. இருந்தாலும் இந்த நால்வகை சாஸ்திர நூட்களின் கருத்தை ஆழ்ந்து யோசிக்கும்பொழுது அவைகளுக்கு ஆதாரமாகவுள்ள சில சாசுவத தத்வங்கள் எல்லாவற்றிற்

கும் பொதுவானவை என்றும் அவைகளால் அடையவிருக்கும் பரம்பொருளானது எல்லாவற்றிற்கும் கடைசி லக்ஷ்யமானதென்றும் காணப்படுகிறது. நமது சாஸ்திரங்களின் இந்த விசேஷத் தன்மையானது இந்தக்கட்டுரைக்கு ஏதுவான வியாசத்தின் கடைசியில் காணப்படும் "ஆயுர்வேதம் மற்ற சாஸ்திரங்களுடன் தொடர்புகொண்டு மற்ற சாஸ்திரார்த்தங்களையும் சேர்த்துப் போதிப்பதில் நோக்கமுள்ளது" என்ற வாக்கியத்தில் ஓரளவு குறிப்பிட்டிருக்கிறது. இந்த உண்மையைத் தெரிந்துங்கூட நமது சாஸ்திர தத்துவங்களுக்கு நேர் விரோதமான தத்துவங்களை அவலம்பித்துள்ள நவீன வைத்திய சாஸ்திரத்துடன் ஆயுர்வேதத்தை ஒப்பிட்டுக் கூறுவதிலும் இரண்டிற்கும் ஸாதிருச்யம் காணுமளவெல்லாம் பெருமைகொள்வதிலும் வித்வஜ்ஜனம் ஆவலுடையதாகக் காணப்படுவது வியக்கத்தக்கது. சாஸ்திர விஷயங்களைக்குறித்து வாதப் பிரதிவாதம் செய்வதில வாஞ்சைகொண்டுதான் இவர் இவ்வேலையை ஆதரிக்கின்றார்களென்று நினைக்கவேண்டியிருக்கிறது. இது எதைக்கொண்டாலும் சரி, ஸங்கீத கலையில் தேர்ச்சிபெற்ற ஒருவர் தமது வித்யையை சாதகம் செய்வதற்காகவே பாடிக்கொண்டிருப்பது சுற்றத்தாருக்கு இன்பத்தைத் தருவதுபோல சாஸ்திர ஞானிகளுடைய இம்மாதிரியான வாதப்பிரதிவாதங்கள் என் போன்ற சிற்றறிஞர்களுக்கு ஓர் அனுக்ரஹமே யாகுமென்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் கிடையாது. சுபம்.

ஹிருதயம் (பத்திராதிபர்)

ஹிருதயம் என்ற பதத்தைப்பற்றிய விமர்சத்தில் டாக்டர் V. N. நாயர் அவர்களின் வியாசம் முதலில் உதித்ததுபிறகு இரண்டாவது வியாசம் பத்திராதிபரால் வெளியிடப்பட்டது. தத்காலம் டாக்டர் V. அச்சுதநாயர் அவர்கள் மூன்றுவது வியாசம் வரைந்துள்ளனர். இது இரண்டாவது வியாசத்தை அக்ஷரம் அக்ஷரமாகக் கண்டிப்பதாகும். இந்த மூன்றுவது வியாசம் முழுவதிலும் டாக்டர் V. N. நாயர் அவர்களுடைய வாக்யசைலியும் யுக்திரீதிகளும் பிரதிபலிக்கின்றன வென்பது வாசகர்களுக்குத்

தெரியலாம். இந்த மூன்றுவது வியாசத்திலுள்ள கண்டனங்களில் ஒன்று கூட இரண்டாவது வியாசத்தை பாதிக்கவில்லை யென்பதை 'ஸ்தாலீ புலாக"ந்யாயத்தால் காட்டுகிறோம். முதல் வியாசத்தின் கருத்தை ஆராய்ந்தால் ஆயுர்வைதிக ஹிருதய பதமானது கடபடாதி பதங்கள்போலன்றிக்கே காலவிப்ரகர்ஷாதி தோஷத்தால் அப்ரசித்தார்த்தகமானதால் பூர்வோத்தர சந்தர்ப்ப விசேஷங்களைக்கொண்டு ஔசித்யததால் அர்த்த நிர்ணயம் செய்யவேண்டியிருப்பதால் ஸமஷ்டிவாசகமாகக் கொள்ளுவதில் ஔசித்யமும் பூர்வோத்தர ஸந்தர்ப்பானுகுண்யமும் ஏற்படுவதுடன் "அர்த்தாத் ப்ரகரணாத் லிங்காத் ஔசித்யாத் அர்த்த நிர்ணய:" என்று பஹுவர்த்தக பதார்த்த நிர்ணயங்களில் சொல்லப்பட்ட கிரமத்தை யொட்டி "ஔசித்யமும்" அர்த்த நிர்ணாயகங்களுள் ஒன்றானதால் அதைப்பின்பற்றுவதில் ந்யாயபாதமோ சாஸ்திர பாதமோ இல்லையென்பதும் ஏற்படுகிறது. இரண்டாவது வியாசத்தில் ஷை ஹிருதய பதமானது சர்வதா விஸ்மிருதார்த்தகம் அல்லவென்றும் பாதகண்டத்தில் சில பாகத்தில் அவ்விதமிருந்தாலும் பிரதேசாந்தரங்களிலும் அவ்விதமே என்று சொல்லுவது சரியல்லவென்றும் அப்படியே வைத்துக்கொண்டாலும் "ஔசித்யத்"தால் அர்த்த நிர்ணயம் செய்வதென்றால் வியஷ்டி வசனத்தில் ஔசித்யாதிசயம் இருக்கிறதென்பதும் காணப்படுகிறது. இனி மூன்றுவது வியாசத்திலுள்ள கண்டனங்களைக் கவனிப்போம். (1) Heart என்பது ஹிருதயம் அல்லது ஹிருதயம் என்பது Heart — குட:—குடம், நீரம்—நீர், மீந:—மீன், என்பன போன்ற வடமொழி தென்மொழி பதங்களில் இருக்கும் பெரும்பான்மையான ஸாரூப்யத்தைவிட்டு அர்த்தகியானமில்லாதவர் ஔசித்யத்தால் அர்த்தமறியக்கூடும் அதுபோல பாதகண்டத்தில் காலாந்தரத்தில் ஸுப்பிரசித்தமாக வழங்கின ஹிருதயபதமும் அதன் அர்த்தமும் பிரதேசாந்தரத்தில் இப்பொழுது வழக்கத்தில் இருக்ககூடும் என்ற ஔசித்யத்தைநாம் காட்டினோமே யல்லது இதுவே பர்யாப்தப் பிரமாணமெனச் சொல்லவில்லை. இந்த ஔசித்யத்தை கண்டனக்காரரும் ஓரளவு ஒப்புக்கொண்டிருக்கிறார். (2) தொழில் பொருத்தம்:—"தசமூலஸிரா:" என்ற வாகட வசனம் கண்டனகாரருக்கு அநுகூலமாகவில்லையென்

தை நாம் வற்புறுத்தவேண்டியிருக்கிறது. தச=பத்து. மூலஸிரா:=மூலபூதமான குழாய்கள், ஹிருத்ஸ்தா:=ஹிருதயத்தில் இருக்கின்றன. இந்தப்பத்து குழாய்கள் சுவாஸாசயங்களில் இருப்பதாகக்கண்டனக்காரர் உண்மையில் நினைக்கிறாரா? பத்து ஸிரைகள் இருக்கும் இடம்தானே ஹிருதயமாகும். பத்து ஸிரைகள் எங்கு இருக்கிறதோ அந்த ஸ்தானத்தை ஹிருதயமென்று வசனம் வியக்தமாகச்சொன்னபோதிலும் அதை ஒப்பாமலிருப்பதற்குக் காரணமென்ன? சுவாஸாசயங்களும் ஸிரைகளுக்கு ஸ்தானமென்றால் ஒவ்வொரு சுவாஸாசயத்திலும் எவ்வளவு ஸிரைகள் இருக்கின்றன? இனி வசனத்தின் மேல்பாகத்தைக் கவனிப்போம். தா:—அந்த் பத்து ஸிரைகளும், ஸர்வத:=நாலாபக்கத்திலும், ஸர்வம் வபு:—சர்வசரீர பாகங்களிலும், ரஸாத்மகம்—ரஸரூபமான, ஓஜ:—ஓஜஸ்ஸை, வஹந்தி—கொண்டுபோகின்றன. இந்த பாகத்தில் கண்டனகாரருக்கு அனுகூலமான அம்சம் என்ன வென்பது காணமுடியவில்லை. பத்து ஸிரைகளும் ரஸதாதுவை சரீர முழுவதும் செலுத்துகின்றன. ரஸதாதுவானது சரீர போஷணத்திற்கும் உபரிதனதாது ஷட்கங்களுக்கும் இன்றியமையாத வஸ்துவானதால் ஓஜஸ்ஸுடன் ஒப்பிடப்பட்டு இருக்கிறது. ஜீவிதம்—பிராண நிலையானது, தந்நிபத்தம்—அதை யொட்டியிருக்கிறது. இந்த இடத்தில் 'தத்' என்ற பதத்தில் சற்று விமர்சம் செய்யலாம். பூர்வபராமர்சியானதத் என்ற பதம் மூல ஸிரைகள், அல்லது ரஸதாது, அல்லது வஹநக்ரியை, இவைகளில் ஒன்றையோ அல்லது முழுவதையுமோ பராமர்சிக்கும். அது எவ்விதமாகிலும் அர்த்தத்தில் பேதம் இல்லை. ரஸாத்மகம் ஓஜ:, என்ற வசனத்தில் "ரஸம், ரக்தம், ஓஜஸ், என்று மூன்றும் ரக்தக்குழாய்கள் வழியாக செலுத்தப்படுகிறன" என்று அர்த்தம் ஏற்படுவதாக இவர் கூறுவது விந்தையே. "கூடம் ஹிதாஹாத்மகம் அஸ்தி தேஜ:" என்ற இடத்தில் தாஹ=தஹனத்தைத், ஆத்ம—ஸ்வரூபமாகக் கொண்ட, தேஜ:=தேஜஸ் என்று பொருள் கூறுவதுபோல பிரகிருதத்திலும் "ரஸாத்மகம் ஓஜ:" என்றால் ரஸஸ்வரூபமான ஓஜஸ் என்று பொருள்படுமேயொழிய ரஸமும், ஓஜஸ்ஸும், என்று பொருள்படாது. இவர் சொல்லுவதை ஒப்புக்கொண்டாலும் ஹிருதய சப்தம் ஸமஷ்டி வாசகமாக

ஔசித்யம்காட்டமுடியாது. வஹனக்ரியையில் கர்த்ரீகள், மூலஸிரைகள் மூலஸிரைகளுக்கு ஆச்ரயம் ஹிருதயம் என்று வசனம் இருப்பதால்இதில் சுவாஸாசயத்திற்குச்சம்பந்தம் நிரூபிக்க முடியாது. சுவாஸாசயம் ஓஜோக்ரஹணம் செய்கிறது. அதை ரக்தத்துடன் Heartடிற்கு செலுத்துகிறது என்பது உண்மையானாலும் அந்த அம்சத்தை "தசமூலஸிரா:" என்ற வசனம் கூறுவதில்லை. மூல ஸிரைகள் ஓஜஸ் முதலியவைகளை வஹிக்கின்றன என்று பிரதிபாதித்து சாந்தமாகிறது. தவிர ஓஜஸ் என்பது Oxygen என்று கூறுவது அசம்பந்தம். 'ஹிருதயம் ஓஜஸுக்கு ஸ்தானமென்றும், ஷட் அஷ்டபிந்துவாத்மகம் என்றும், திரவரூபம் என்றும்" வசனங்களை நமது கண்டனக்காரர் மறந்துவிட்டார். ரஸம் என்பதை Lymph என்று கூறினதும் சரியல்ல. இந்த விமர்சம் பிரகிருதத்திற்கு அனுபயுக்தமாதலால் நிறுத்துகிறோம். (3) புண்டரீகம்:—செந்தாமரை என்ற அர்த்தத்தை நமது கண்டனக்காரர் மனமில்லாமல் அர்த்தாங்கீகாரம் செய்கிறார். மீமாம்ஸகர்களுடைய அர்த்த நிர்ணயத்தை இதுவரையில் யாரும் ஆக்ஷேபித்ததில்லை. மீமாம்சக மதத்தில் வாதம் உண்டேயொழிய அர்த்த நிர்ணயத்தில் ஜைனர், பௌத்தர், முதல் யாரும் விஸம்வாதம் செய்ததில்லை அந்த அர்த்த நிர்ணயத்தை ஒப்பாவிட்டால் நமக்கு ஹானியொன்றுமில்லை. "சுக்லரக்தாவபாஸானி ரக்தபர்யந்தானி ரக்தஸிரா ராஜீ ஸந்தானி, என்ற புண்டரீக குஷ்டவசனங்கள் புண்டரீகபதம் ரக்தகமல வாசகமென்பதைக் காட்டுகின்றன. செந்தாமரை புஷ்பமானது முகுளாவஸ்தையிலும் விகஸிதாவஸ்தையிலும் குங்குமம்போன்ற ரக்தவர்ணமில்லாமல் ஸிதரக்தவர்ணமாகவே காணப்படுகின்றது, (4) ஹிருதயம் மனஸஸ்ஸ்தானம்:—ஹிருதய பதமானது நார்த்தமாகப்பிரயோகத்தில் காணப்படுவதாகமுதல் வியாசத்தில் சொல்லப்பட்டிருப்பதை யொட்டி மற்ற நூல்களில் பிரயோகம் எப்படியிருந்தபோதிலும் ஆயுர்வேத நூல்களில் ஹிருதயத்தை உறுப்பு என்றே கூறுகின்றனர் என்பதற்காக ஷடி வசனங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே இவ்விஷயத்தில் கண்டனக்காரருடைய பரிஹாரோக்தி அஸ்தான விஜிரும்பிதமாகும். (5) உரஸ்:—கண்டனகாரருடைய அர்த்தம் காவியபதங்களில் ஒரு சமயம் பொருத்தமாக

விருக்கலாம். "உரஸ்யந்த: க்ஷதே" உரஸ்஡ானது: அந்த;—உள்ளே, அல்லது மத்தியில், அல்லது நுனியில், க்ஷதேஸதி—காயத்தை அல்லது விரணத்தை அடைந்தால் என்பது பொருள். இங்கு உரஸ் என்பது ஓர் அவயவத்தைக் குறிப்பிட்டாகவேண்டும். இல்லாவிட்டால் அவயவவாசியானபதம் இல்லாமல் ஒழியும். அந்த: என்ற பதம் சுவாஸாசயங்களைச் சொல்லுவதாக நினைப்பது சரியல்ல. 'உரஸ்த:' என்ற வசனம் வியாதிக்கு அதிஷ்டானமான உறுப்பைச் சொல்லுவதால் அவ்வுறுப்பு சுவாஸாசயம்தான் ஆக முடியும். காஸ சுவாஸங்கள் சுவாஸாசய நோய்களென்று கண்டனக்காரர் ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் உரஸ் பதத்திற்கு சுவாஸாசயமென்று பொருள் கூறுவதைவிட்டு வேறு அந்த: முதலிய பதங்களைத்தேடி அதற்கு சுவாஸாசயமென்று பொருள் சொல்லிக்கொண்டு சிரோவேஷ்டனப் பிராணாயாமம் செய்யவேண்டிய நியாயமில்லை. (6) ஹிருதயம் புண்டரீகவத்:—இதில் உபமாலங்காரம் சொன்னவர்களைக் கண்டித்திருக்கின்றார். உபமாலங்காரம் சொன்னவர்களை நாம் தேடிப்பார்க்கும் பொழுது கண்டனக்காரரே அலங்காரம் சொல்லுவராகக் காணுகின்றார். இவ்வாதத்தை ஆரோபணம்செய்து அதைக்கண்டிக்கவும் புறப்பட்டது பண்டித கிருத்யமல்ல. உபமானப்பிரமாணத்திற்கும் வேண்டிய அங்கங்களான, உபமானம், உபமேயம், உபமா வாசகம், ஸாதர்ம்யம், என்பவைகளைப் பார்த்துப் பிரமைகொண்டு அலங்கார நிரூபணமென்று நினைத்து விட்டார். அலங்காரத்திற்குக்தான் இவை அமையுமென்பது பிரமம். (7) "உத்காட்ய யோககலயா":யோகசாஸ்திர ஹிருதயம்வேறு, டாக்டர் V.N. நாயர் அவர்கள் ஹிருதயம் வேறு, பத்மொதிபர் ஹிருதயம் வேறு, வைத்திய ஹிருதயம் வேறு, என்று சுலபத்தில் பல ஹிருதயங்களைச் சொல்லலாம். இப்படிச் சொல்லுவதாகில் இவ்வளவு விமர்சமேவேண்டாம். ஆயுர்வேத ஹிருதய லக்ஷணமான "யோகிநோய்த்ரபச்யந்தி" என்ற வசனத்தைநமது கண்டனக்காரருக்குக் கியாபகமூட்டிவைத்ப ஹிருதயமும் யோகிஹிருதயமும் ஒன்றென்று சொல்லுகிறோம். "தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம்" என்ற வசனத்தில் சொல்லப்பட்ட ஸூக்ஷ்ம ஸுஷிரம் சுவாஸ கோசங்களில் அமைந்திருப்பதாகக் கூறுவது மிகவும் அசம்பாவிதம். தஸ்ய, அந்தே, ஸுஷி

ரம், என்று மூன்று பதங்களும் ஏகவசனாந்தமாக விருப்பதால் இரண்டு சுவாஸாசயங்களின் ஸுஷிரங்களைச் சொல்லுவதாகில் "தயோ: அந்தயோ: ஸுஷிரே" என்ற வசனவிபக்தி இருக்கவேண்டுமென்பது பண்டிதர்களுக்கு ஸ்பஷ்டம். (8) ஸப்தசாதாரா:—இவர் சொல்லுகிறபடி ரக்தாசயம் என்பது சுவாஸப்பைகளென வைத்துக்கொண்டால் அப்பொழுது ரக்தாசயத்தில் உள்ள கோஷ்டாங்கமான ஹிருதயம் பரிசேஷாத் Heart ஆகியே தீரும். இவ்வளவு தூரம் போராடிய நமது கண்டனக்காரர் தன் வாயால் ஆயுர்வேத ஹிருதயம் Heart எனக்கடைசியில் தைவவசாத் ஒப்புக்கொண்டதுபற்றி சந்தோஷிக்கிறோம். (8) உரஸ், கபாசயம், சுவாஸாசயம் என மூன்றையும் கூட்டிக்குழப்பி:—கண்டனக்காரருடைய இந்த பரிஹாஸோக்தியை நாம் வரவேற்கிறோம். வாதப்பிரதிவாதங்களில் பரிஹாஸோக்தி ஓர் மண்டனமாகும். சுவாஸாசயமென்று ஆயுர்வேத நூல்களில் சொல்லப்படவில்லை, ஆங்கிலர்களுடைய lungs என்ற பதத்திற்காக சுவாஸாசயமென்று நாமாகக் கல்பித்துக்கொண்டது. கபாசயம் என்று ஓர் ஆசயமும் அதில் உரஸ் என்ற இரண்டு பைகள் கோஷ்டாங்கங்களெனவும் நூல்கள் சொல்லுகின்றன: "ரக்தஸ்யாத்ய: க்ரமாத் பரே | கப ஆம பித்த பக்வாநாம் வாயோர் மூத்ரஸ்ய சஸ்மிருதா: ll இதன்பொருள்—முதலில் ரக்தாசயம், பிறகு கீழே வரிசையாக கபாசயம், ஆமாசயம், பித்தாசயம், பக்வாசயம், வாதாசயம், மூத்ராசயம், என ஆக ஏழு ஆசயங்கள் இருக்கின்றன. "கோஷ்டாங்கானி ஸ்திதான்யேஷு ஹிருதயம் க்லோம புப்புஸம் | யக்ருத் ப்லீஹா உந்துகம் வ்ருக்கௌ நாபி டிம்ப ஆந்த்ர பஸ்தய:" | | இதன் பொருள். ஹிருதயம், க்லோம, புப்புஸம், யக்ருத், ப்லீஹா, உந்துகம், வ்ருக்கங்கள், நாபி, டிம்பம், ஆந்திரம், பஸ்தி என்ற 12 உறுப்புகளுக்குக் கோஷ்டாங்கங்களெனப் பெயர். இந்த 12 உறுப்புகளும் முன் சொன்ன ஏழு ஆசயங்களில் இருக்கின்றன. அதாவது (1) ரக்தாசயத்தில் ஹிருதயம் (2) கபாசத்தில் க்லோமபுப்புஸங்கள் இவைகளே Lungs என்ற சுவாஸாசயங்கள்) (3) ஆமாசயத்தில் யக்ருத், ப்லீஹா, (4) பித்தாசயத்தில்—உந்துகம் (5) பக்வாசயத்தில்—வ்ருக்கங்கள், நாபி, (6) வாதாசயத்தில் டிம்பம் ஆந்திரம், (7) மூத்திராசயத்தில்

[library stamp]

பஸ்தி என ஸர்வக்ஞான வாக்படாசார் கிரமமாகவும் சுருக்கமாகவும் கூறியுள்ளார். இந்த ஆசயங்களின் சர்வ பிறகு வெளிவரும்) ஸமஷ்டி யைப்பார்க்கும்பொழுது பத்மாகாரமாக இருப்பதாகச் சொல்லப் படுவதைக் கவனிப்போம். பத்மமானது ஒரு காளத்தில் ஒரு கோசமாக அமைந்து பல தளங்களுள்ளதாக விருக்கிறது. சுவாச சயங்கள் இரண்டும் தனித்தனியாக ஒரு காளம் பெற்று அமைந் திருக்கின்றன. அவ்விதமே ஹிருதயமும் தனி காளம்பெற்றுள்ளது. இவ்விதம் மூன்று தனித்தனி காளங்களில் அமைந்துள்ள மூன்று அவயவங்களை மூன்று தளங்களாகவோ அல்லது ஒரு கர்ணிகை இரண்டு தளங்களாகவோ எப்படிக் கருதுவது? இதைவிட மூன்றை யும் மூன்று பத்மகோசங்களாகக் கருதுவது சுலபம். ஆகவே த்ரிதயத்தில்தான் பத்மஸாம்யம் இருக்கிறதென்பது அனுசிதவாதம். டாக்டர் V. N. நாயர் அவர்களுடைய வியாசத்தை நாம் பூர்ணமாக விமர்சம் செய்யவில்லை. ஓர் அம்சம் தான் முடிந்திருக் கிறது. மற்ற அம்சங்கள் காலக்கிரமத்தில் விமர்சிக்கப்படும்.

விஷமஜ்வரம்.

மதுக்கூர் டாக்டர் K. ஷரோடி அவர்கள்.

விஷமஜ்வரம் ஐந்து வேற்றுமைகளை யுடையது என்பதை முன்னமே சொல்லப்பட்டுள்ளது. இவைகளில் ஸந்தத மென்றும் ஜ்வரம் ஏற்பட்டது முதல் விடாது 12 நாட்கள் வரையில் நீடித்திருந்து பிறகு விட்டுவிடுகிறது. ஆனால் இந்நாட்களில் தாபம் காலையில் கொஞ்சம் குறைவாயும் மாலையில் அதிகமாயும் காணும். சில ஸமயங் களில் தேகத்தில் சிறுசிறு வேர்வையும் சிலுசிலுப்பும் காண்ப துண்டு. தலைவலி, மலச்சிக்கல், நாக்கில் அதிக வெண்மை, மயக்கம், வாந்தி முதலிய லக்ஷணங்களும் கண்டு ஆரம்பம் முதல் கொண்டு சன்னி சம்பந்தத்தைக் கொடுக்கவல்லது. சிலநாட்கள் விலகிவிட இச்சுரமும் விலகிவிடும். இராப்பகல்களில் இரண்டிரண்டு தரம் ஏறி இறங்குகிறதென்பது ஸததமெனப்படும். இதில் பசியின்மை, பலக்குறைவு, தாது க்ஷீணதசை, மண்ணீரல் கல்லீரல்களின் பெரு த்தல், நீர்கழிப்பு மிக்கம் முதலிய குறிகள் காணும். மூக்கு வாய்களின் வழியாய் ரத்தம் வருதல் அதிஸாரம் ஆகியவை இதன்

உபத்ரவங்களாகும். இராப்பகல்களில் ஒவ்வொருதரம் ஏறிஇறங் குவது அன்யேத்யுஷ்கம். ஒருநாள்விட்டு மறுநாளிலுண்டாய்க் ...வது த்ருதீயகமும் இரண்டு நாட்களை விட்டு அடுத்த நாளில் ...வது சதுர்த்தகம் மத்தியிலிரண்டு நாட்களிலடுத்து ஒருநாளி ...க்காது காண்பது சதுர்த்தக விபர்யயமுமாகும். இக்கடைசி வேற் றுமை சதுர்த்தகத்தில் அடங்கியதேயாகும். அன்யேத்யுகம் த்ருதீயக சதுர்த்தகங்கள் முறையே அதிக அதிகக்கஷ்டங்களைக் கொடுக்கின் றன. குறிப்பிட்ட நேரங்களிலுண்டாவதோ விலகுவதோவிருந்து வர ... வருகின்றன. ஆரம்பத்தில் அரை மணி ஒரு மணி காலகாக மடிக்காரம்பித்து மத்தியில் கொஞ்சம் விட்டும் மறுபடியும் ஏறும் ...லம்வரையில் நீடித்து அடிக்கின்றன. மூன்றும் முறை நான்காம் முறைகளில் (முறை நாட்களில்) இரண்டுதடவை களிலடிப்பது முண்டு. இக்கடைசிக்குறிப்பு முடிவிற்காகும். இவைகளில் அசதி அரோசகம், கொட்டாவி, வயிற்றுப்பொருமல், மலச்சிக்கல், வயிற் றுப்பிரட்டல், வாந்தி, மயக்கம், கால், முதுகு, பிடரி, இடுப்பு விலாப்பக்கங்களில் கடுப்புவலிகள், கண் உள்ளங்கைகளில் எரிச்சல், காதுகளிலிரைச்சல் தலைவலி, நாக்குக்கசப்பு தொண்டை எரிச்சல் தாஹ வரட்சி முதலியன கண்டு தொடர்ந்து தேகம் ஜில்லிப்பும் பெற்று நடுக்கமேற்படுகிறது. இந்நிலையில் அநேகர் பானத் ...லை விரும்புவதோடு உட்டைக்கு நற்போர்வைகளையும் ஆவலுடன் ...ரும்புகின்றனர், வாந்தி, வரட்சி வலிகள் இச்சமயங்களில் வலுப் பதுமுண்டு. சரீரப்பத்திற்கேற்ப இவ்வவஸ்தையின் ஏற்றக் குறைவுகள் ஏற்படுகின்றன. உள் வெளி நடுக்கல்களின் பலாபலத ...ப்பொறுத்துப் பலரால் கூடி அடக்கமுடியா வண்ணம் தூக்கித் ...க்கிப்போடும். தேகத்தில் குளிரானாரம்பிக்கும் தருணம் ...ருக்க நெருக்க நடுக்கல் மட்டுப்பட்டுப் பின்னால் இரண்டாவ ...து உஷ்ணவஸ்தை ஏற்பட பிணியாளன் எவ்வித உஷ்ணோப ...ங்களையும் வெறுக்கலாகின்றான். குட்டுன் கொடுமையினால் ...ஸந்தாபசாரத்தை ஆசைப்படுகிறான். உஷ்ணத்தின் ...ருக்கு 106 - 107 டிக்ரிவரையிலேறுவதுண்டு. தேகம் முழு ...ற்றி எரியும் தோற்றமும் வாந்தி, வயிற்றுப்போக்கு, அதிக மூத்திரம், தாஹவரட்சி இந்த அதிகமேற்பட்டிருக்கும் தோஷ

கோபானுஸாரம் நிலைமைபெற்று பின்னர் இக்குறிப்புகள் பல பல
படியாக இறங்கவாரம்பித்துக் கடைசியாக மூன்றாவதான ஸ்திதி
வஸ்தைக்குக் கொண்டுவிடுகிறது. சிரமேல் வியர்வை கண்டு ப்
டர்ந்து தேகமுழுதிலும் பாவித் தண்ணீர்போல வியர்வை சொ
டக்கொட்டக் கொஞ்சம் கொஞ்சமாய் எக்கோளாறுகளுமின்றிச்சேவ்
விலகி நீரோகிபோல் ஆகிவிடுகின்றான். ஆனால் அசதி பலவீனங்
கள் மட்டில் பாக்கிகளாய்க் காணப்படுகின்றன. இம்மூவவஸ்தை
களும் மணிக்கணக்கில் நிலவவாரம்பித்து நாட்கணக்கு வரைக்கு
நிலைத்துவந்திருப்பது அனுபவஸித்தமாகும். இம்முறைகளை
காலாகாலங்களில் கவனித்து நிச்சேஷபரிஹாரமளிக்காது தற்கால
தங்கு தடைகளைச் செய்து வருவதால் ஜீர்ணஜ்வரம் ஏற்படுகின்றது.
இதனால் மண்ணீரல் மலரவாரம்பித்து வலுக்க முடிவை எதிர் பார்
பதே முடிவாகிறது. கல்லீரல் கனக்கவேற்படுவதால் காளஜ்வ
மேற்பட்டு இறைவனைச் சரண்புகலாகின்றது. மேலும் யோசிக்கு
கால் கெடுதலையடைந்த திரிதோஷங்கள் ஆசயாசயங்களில் வ
வுற்று இக்காலத்துத்தனிப்பட்ட முறைகளென்று கூறிவரும் சு
வேற்றுமைகளைப் பலவிளப்புகின்றன. பொதுவாக எவ்வியாதியிலு
சுரம் காண்பது பர தந்திரரூபத்திலாக இருப்பதால் ஆங்காங்
ஸ்வ தந்திரத்தின் பெயர்தான் விளக்கப்பட்டிருப்பினும் நாகரி
முறைகளை ஒட்டி மற்றும்சில குறிப்பான சுர வேற்றுமைகளையு
கூற இங்கு நிதர்சனப்படுத்துவது அனுசிதமாகாததால் ஒவ்வொ
றின் சுருக்க விசாரங்களை இதனடியில் சிந்திப்போமாக. ஆந்தி
ளாங்கிபாதம்:-பண்டைகாலத்து இச்சுரக்கோளாறுகளில்லாமலிரு
பிறகு பாச்சாத்தியர்களின் நிரந்தர வாஸமிங்காரம்பமானதும் இப
பரவல் ஏற்பட்டுள்ளதாய்க் கூறப்படுவது இது ஓர்விதப் பூச்சிவ
விகாரத்தினால் ஏற்படுவதாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. இது
தொத்து வியாதியாக உணரப்பட்டுள்ளது. முதலில் சுர மாரா
மாகி நாட்களுக்கு நாள் சுரம் ஏறி இரண்டாவது வாரத்தி
வேர்க்குருபோல் பல தேகத்திலேற்பட மண்ணீரல் கொஞ்
பெருக்க வாரம்பிக்கிறது. சிறுகுடலின் வால்பக்கம் கொஞ்ச
உணரப்படுகிறது. மயக்கம், உளறுதல், வயிற்றுப்போக்கு செ
மல் முதலிய லக்ஷணங்கள் காண்கின்றன.

(1)	(2)	(1)	(2)